**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டூர்,**
**தேதி: 30.01.2026**
**OS. No. 91/2020**
**வழக்கு சாட்சி PW.1–பத்மநாபன், த/பெ.விஸ்வநாதன்**

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

1) தாவா சொத்தாக காண்பிக்கப்பட்டுள்ள சொத்துக்களின் சர்வே எண் என்னவென்றால் எனக்கு எழுத, படிக்க தெரியாது, அதனால் பார்த்து தான் சொல்லவேண்டும். தாவா சொத்துக்களின் விஸ்தீரணம் தெரியுமா என்றால் 25 சென்ட் ஆகும், அதை 8 நபர்கள் சேர்ந்து வாங்கியுள்ளோம். நிரூபண வாக்குமூலத்திலுள்ள விவரங்கள் வழக்கறிஞருக்கு நான் சொல்லியதன் பேரிலும், ஆவணங்கள் சமர்பித்ததன் பேரிலும் தயார் செய்யப்பட்டதாகும். தடவழியாக காண்பிக்கப்பட்டுள்ள 2 வது அயிட்ட சொத்தானது எங்களுக்கு பாத்தியப்பட்டது இல்லை என்றும், 3 ம் வாதி மாணிக்கவேலுக்கு தான் பாத்தியப்பட்டது என்று தெரிவித்துள்ளோம் என்றால் மற்ற 7 வாதிகளுக்கும் சேர்த்து 3 ம் வாதி வாங்கியுள்ளார்.

2) 3 ம் வாதி மாணிக்கவேல் கிரையம் பெற்ற 21.04.2005 கிரைய ஆவணத்தில் மற்ற வாதிகளுக்கும் சேர்த்து தான் வாங்கியுள்ளார் என்று குறிப்பிடவில்லை என்றால் படித்து பார்த்து தான் சொல்லவேண்டும். நீதிமன்ற ஆணையாளர் தாவா சொத்துக்களை பார்வையிட்டு, அளந்து பார்த்து அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். ஆணையர் தாக்கல் செய்துள்ள அறிக்கைக்கு எங்கள் தரப்பில் ஆட்சேபனை எதுவும் தெரிவிக்கவில்லை என்றால் என்ன அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்று எங்களுக்கு தெரியவில்லை. ஆணையாளரின் அறிக்கை குறித்த விவரங்கள் தெரியாமலேயே தான் அந்த ஆணையர் தாக்கல் செய்த அறிக்கை மற்றும் வரைபடங்களை எங்கள் தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்யவேண்டும் என்று நிரூபண வாக்குமூலத்தில் கேட்டுள்ளேன் என்றால் ஆமாம்.

3) 3ம் வாதி மாணிக்கவேலு இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க போகிறாரா என்றால் அவரிடம் கேட்டுதான் சொல்லவேண்டும். மற்ற வாதிகள் யாரேனும் சாட்சியம் அளிக்க போகிறார்களா என்றால் தேவைப்பட்டால் சாட்சியம் அளிப்பார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் நீ.ம.சா.ஆ.2 நீதிமன்ற ஆணையர் வரைபடத்தில் உள்ளவாறு தான் சொத்துக்கள் நிலையில் உள்ளது என்றால் சரிதான், எங்கள் சொத்திற்கு மேற்கு பக்கம் வடக்கு தெற்காக 6 அடி பாதை உள்ளது. நீ.ம.சா.ஆ–2 வரைபடத்தில் பிரதிவாதிகளின் நிலத்திற்கு மேற்குபக்கம் காம்பௌண்ட் சுவரை ஒட்டி பஞ்சாயத்து ரோடு செல்கிறது என்றால் சரிதான், ஆனால் அந்த பஞ்சாயத்து ரோடு வழியாக சென்றால் எங்கள் சொத்திற்கு செல்ல முடியாது. மேற்கண்ட பஞ்சாயத்து ரோடு வழியாக சென்று, பிரதிவாதிகளின் நிலத்தை தாண்டி வடபுறமாக கிழமேலாக ஒரு தடவழி உள்ளதாக நீ.ம.சா.ஆ.2 வரைபடத்திலும், நீ.ம.சா.ஆ.3 சர்வேயர் வரைபடத்திலும் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான், ஆனால் அவ்வாறு நிலையில் எந்தவொரு தடமும் இல்லை.

4) தற்போது என்னிடம் காட்டப்படும் நீ.ம.சா.ஆ–4 ஆட்சேபனை மனுவில் மேற்கண்டவாறு தடவழி நிலையில் இல்லை என்றும், அதை தவறுதலாக ஆணையர் வரைபடத்திலும், சர்வேயர் வரைபடத்திலும் காட்டப்பட்டுள்ளதாக எந்த ஒரு ஆட்சேபனை குறிப்பும் இல்லை என்றால் சரிதான்.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு 17.02.2025ம் தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது).

ஒம்/–திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.